**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 03.02.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் சுவலக்ட் சூரிய ஒளி மின்னழுத்தி நிறுவனம், கோவை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கோவை, சுவலக்ட் சூரிய ஒளி மின்னழுத்தி நிறுவனம், கோவை உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 31.01.2025 அன்று கையெழுத்தானது. சுவலக்ட் நிறுவனம், சூரிய மின் ஆற்றல் உற்பத்தியில் உலகளவில் 40 ஆண்டு காலமாக, BIS உலகதரத்தில் சூரிய மின்தகடுகள் உற்பத்தி செய்கிறது. சூரிய மின் தகடுகள், சூரிய மின் கட்டுப்பாட்டு கருவிகள், சூரிய மின் நிலையங்கள் அமைப்பதற்கான கட்டமைப்பு மற்றும் மின்நிலைப்படுத்திகள் போன்றவை இந்நிறுவனத்தின் முக்கிய உற்பத்திகளாகும். இந்த ஒப்பந்தம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர். வெ. கீதாலட்சுமி, பதிவாளர், முனைவர். R.தமிழ்வேந்தன், வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர், பேராசிரியர். அ.ரவிராஜ், பேராசிரியர் மற்றும் தலைவர், தே.ரமேஷ் மற்ற பேராசிரியர்கள் மற்றும் திரு.நாராயணன் இயக்குநர் செயல்பாடுகள், சுவலக்ட் நிறுவனம் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் இளங்கலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான தொழிற்சாலை பயிற்சிகளுக்கும், வேலைவாய்ப்பிற்கும், வழிவகுக்கிறது. வேளாண்மைத்துறையில் புதிய தொழில்நுட்பத்தில் அதிக திறனுடைய சூரியமின் தகடுகளை பயன்படுத்தி சூரிய மின் ஆற்றல் உற்பத்தி மற்றும் வேளாண் சூரிய ஒளி மின்நுட்பத்தை (Agrophotovoltaics) மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கிறது, இந்த ஒப்பந்தம் மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும், தொழிற்துறை நிறுவனங்களுக்கும் தேவையான புதிய தொழில்நுட்பத்தை வழங்குகிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**